செய்தி வெளியீடு எண்:068 நாள் : 28.01.2014

# செய்தி வெளியீடு

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர்கள் கூட்டம் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலக மாநாட்டு கூட்ட அரங்கில் இன்று காலை நடைபெற்றது. மேற்படி ஆய்வுக் கூட்டத்தினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னய்யா, அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் முனைவர் இரா. பழனிசாமி, இ.அ.ப. மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

6வது சுற்று கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி பணியின் போது மேற்கொள்ள ஏதுவாக பிரத்தியோகமான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன் கால்நடை வளர்ப்போரிடம் தடுப்பூசி போடுதல் சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அனைத்து கிராமங்களிலும் கிராம சபை கூட்டத்தில் கால் மற்றும் வாய் கோமாரி நோயின் தாக்கம் மற்றும் வருமுன் காப்பதற்கான செயல்திட்டம் குறித்து விவாதிப்பது, அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி வழங்குதல், போன்றவை குறித்து மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகள் மறறும் இதர பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

2013–2014ம் ஆண்டில் 240 கிராம ஊராட்சிகளில் 12,000 பயனாளிகளுக்கு 12,000 கறவைப்பசுக்கள் என்ற குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 231 கிராம ஊராட்சியில் 8052 பயனாளிகளுக்கு 8052 கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

2013–2014ம் ஆண்டில் 2740 கிராம ஊராட்சிகளில் 1,50,000 பயனாளிகளுக்கு 6,00,000 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் என்ற குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், 2544 கிராம ஊராட்சியில் 1,24,406 பயனாளிகளுக்கு 4,97,624 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**வறட்சி நிவாரணத்தின் கீழ் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குதல்**

வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவன பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் ரூ.39.65 கோடி செலவில் 32,250 ஏக்கர் நிலத்தில் 40,396.603 மெ.டன் தீவன புல் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தீவன கிடங்கு**

ரூ.12.5 கோடியில் 125 தீவன கிடங்குகள், 30 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு உலர் தீவனம் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கோழியின அபிவிருத்தி திட்டம் குறித்து ஆய்வு.**

2012–2013 ஆம் ஆண்டில் ரூ.22.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 560 அலகுகள் நாட்டுக் கோழி இனத்திற்கும் 1058 அலகுகள் கறிக்கோழி வளர்ப்பிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதில் தற்போது 548 நாட்டுக் கோழி பண்ணைகளும் மேலும் 483 கறிக்கோழிப் பண்ணைகளும் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

2013–2014ம் ஆண்டிற்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2013–2014 – ஆண்டிற்கு கறிக்கோழி பண்ணைகள் 500 அலகுகளும் நாட்டுக் கோழி பண்ணைகள் 4080 அலகுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றது. இதில் 31 கறிக்கோழிப் பண்ணைகளும், 182 நாட்டுக் கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளது.

**கால்நடை நிலையங்களின் புதிய கட்டிடம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் குறித்து ஆய்வு (2012–2013)**

NABARD திட்டத்தின் கீழ் 360 கால்நடை மருந்தகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 312 புதிய கால்நடை மருந்தக கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

NADP- 85 இலக்கில் 38- புதிய கால்நடை மருந்தக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ESVHD – 142இலக்கில் 11- புதிய கால்நடை மருந்தக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

25 Crore Repair and Renovation (2013-2014) - 345 கால்நடை நிலையங்களில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும்.

மார்ச் 2014–ம் மாதத்தில் மேற்கொள்ளப்படும் 6–வது சுற்று தடுப்பூசிப் பணி நிகழ்வுகளில் அனைத்து கால்நடைகளுக்கும் 100% தடுப்பூசி போடப்பட வேண்டும் என்றும், இதற்கென பிரத்தியேகமான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மண்டல இணை இயக்குநர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கினார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9